‘திராவிட மாடல்’ அரசின் பணிகளைக் கண்டு, மூடர் கூட்டத்தின் முதன்மை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா அலறுகிறார்!

முட்டாள் கூட்டத்தின் ‘முந்திரிக்கொட்டை’ உளறிக் கொட்டாமல் இருப்பது விஜய்க்குமே நல்லது!

முட்டாள் கூட்டத்தின் முந்திரிக்கொட்டை உளறிக் கொட்டாமல் இருப்பது விஜய்க்குமே நல்லது.

மூடர் கூட்டத்தின் முதன்மை அமைச்சரே கேளும்.

‘கழாஅக்கால்’ பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

அறிஞர்கள் கூடியுள்ள மன்றத்தில் ஒரு முட்டாள் நுழைவது என்பது அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாமல் படுக்கையில் வைப்பதைப் போன்றது.

திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சாதனையாக மட்டுமின்றி, கோவையின் புதிய அடையாளமாகவும் ஆகியிருக்கின்ற பெரியார் அறிவுலகம் திறப்பு விழா கண்டுள்ள நிலையில், தமிழ்நாட்டின் எதிர்காலத் தலைமுறையினரின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அந்த அறிவுலகம் அமைப்பதற்கு, திராவிட மாடல் அரசு மேற்கொண்ட பணிகளைக் கழகத் தலைவர் திராவிட நாயகர் அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது கண்டு அலறுகிறார் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா. கழகத் தலைவர் பொறாமை கொண்டு பேசுவதாக ஆதவ் அர்ஜூனா தனது பேதைமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அ.தி.மு.க ஆட்சியில் திட்டமிடப்பட்ட மருத்துவக் கல்லூரிகளையும் பிற திட்டங்களையும் தி.மு.க ஆட்சியில் திறந்து வைக்கவில்லையா என்று கேட்டிருக்கிறார். முந்தைய ஆட்சியின் மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்வதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி முதல் திராவிட நாயகர் ஆட்சி வரையிலான கழக அரசின் நிர்வாக இலக்கணம். சத்துணவை முட்டையுடன் கூடிய முழுமையான சத்துணவாகவும், கிருஷ்ணா நதி நீர் சென்னையின் தாகத்தைத் தணிக்கும் வகையிலும், அ.தி.மு.க ஆட்சியில் தீர்மானம் மட்டும நிறைவேற்றப்பட்ட எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தை அதே பெயரில் தொடங்கி, அதற்குரிய புதிய கட்டடத்தைக் கட்டியதும், அம்மா உணவகங்கள் உள்ளிட்ட முந்தைய ஆட்சியின் திட்டங்கள் மேலும் சிறப்புடன் தொடரவும் ஆட்சி நிர்வாகத்தை நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்.

2011-21 வரையிலான அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் திட்டமிடப்பட்ட மருத்துவக்கல்லூரிகள், பேருந்து முனையங்கள், மேம்பாலங்கள் உள்ளிட்டவை பல்வேறு காரணங்களால் கால்வாசிகூட நிறைவேறாத நிலையில், மக்கள் பயன்பாட்டினைக் கருதி அவற்றை முழுமையாக நிறைவேற்றியது திராவிட மாடல் அரசு. அத்தகைய நிர்வாகத் திறன் ஏதுமற்ற த.வெ.க அரசின் முதல் போட்ட அமைச்சர் தி.மு.கவின் தலைவரைப் பற்றிப் பேசுவதற்கு எந்த யோக்கியதையாவது இருக்கிறதா?

தி.மு.க. ட்விட்டர் பதிவில் விமர்சனம்!



சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணியிலோ, கோவை பெரியார் அறிவுலகம் கட்டடத்திலோ பெயிண்ட் அடிக்கும் வேலையாவது த.வெ.க அரசு செய்திருக்குமா? முழுமையாகப் பணிகளை நிறைவேற்றியது திராவிட மாடல் அரசு. தேர்தல் நெறிமுறைகள் நடைமுறைக்கு வந்த காரணத்தால் அவற்றை செயல் பாட்டுக்குக் கொண்டு வர முடியாமல் போனது. சினிமா க்ளைமாக்ஸ் காட்சியில் வரும் சிரிப்புப் போலீஸ் போல த.வெ.க. ஆட்சியில் இவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் பயன்பாட்டுக்காகவும், எதிர்காலத் தலைமுறையினரின் அறிவாற்றல் வளம் பெறவும் திராவிட மாடல் ஆட்சியில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டவற்றைப் புதிய ஆட்சியாளர்கள் திறந்து வைப்பதில் தி.மு.கவுக்கும் எங்கள் தலைவருக்கும் எந்தவிதப் பொறாமையும் கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் பெருமைப்படுகிறோம். வள்ளுவர்கோட்டம் தொடங்கி, கோயம்பேடு பேருந்து முனையம், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை முதன்மைக் கட்டடம் உள்ளிட்ட பலவும் தி.மு.க ஆட்சியின் விளைவுகள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். மூடர் கூட்டத்தின் முதலமைச்சரும் பிற அமைச்சர்களும்தான் பொறாமைக் குணத்துடன், மக்கள் நலத் திட்டங்களை இழிவுப் படுத்தும் வகையில், “தி.மு.க. காசில் கட்டினார்களா? தி.மு.க தலைவர் சொந்தப் பணத்தில் கட்டினார்களா?” என்று வாய்க்கொழுப்புடன் பேசித் திரிகிறீர்கள்.

தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம் விஜய் பணமா? அல்லது அப்பன் வீட்டுப் பணமா? ஆதவ் அர்ஜூனாவின் லாட்டரி மார்ட்டின் பணமா? அரசாங்கக் கஜானாவிலிருந்து அள்ளித் தெளித்துத்தானே மார்பிலே பெருமை சந்தனம் பூசிக் கொள்கிறீர்கள்?

தி.மு.க.விடம் தமிழ்நாட்டை மக்கள் நம்பிக் கையுடன் ஒப்படைத்தபோது, அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில், திராவிட மாடல் அரசு நிறைவேற்றிய திட்டங்களைச் சொன்னால் ஆதவ் அர்ஜூனாக்கள் ஏன் அலற வேண்டும்? பெரியார் அறிவுலகத்தில் இருந்த ‘நான் முதல்வன்’ என்ற வார்த்தைகளைக் கண்டு முதலமைச்சர் விஜய்யும் அவருடனான மற்றும் பலரும் ஏன் பதறினார்கள்? தானே முதலமைச்சராக இருக்கும் நிலையிலும், நான் முதல்வன் என்று சொன்னால் அது மக்கள் மனதில் இன்னமும் கம்பீரமாக வீற்றிருக்கும் எங்கள் கழகத் தலைவர் திராவிட நாயகரைக் குறிக்கும் என்கிற அச்சத்தினாலா?

பெரியார் அறிவுலகம் திறக்கப்பட்டதில் தி.மு.க. பெருமைப்படுகிறது. 5 மாதத்தில் ஸ்டிக்கர் ஒட்டுவதைத் தவிர வேறெதுவும் உருப்படியாக செய்யத் திறனற்ற த.வெ.க. வெட்கப்படவேண்டும். முட்டாள் கூட்டத்தின் முந்திரிக்கொட்டை உளறிக் கொட்டாமல் இருப்பது விஜய்க்குமே நல்லது.

— தி.மு.க. ட்விட்டர் பதிவு!

நீக்கப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையை விட குறைவான வித்தியாசத்தில் வெற்றி:

100 தொகுதிகளில் த.வெ.க.வின் வெற்றியை உறுதி செய்த எஸ்.ஐ.ஆர்.!

ஆய்வில் அம்பலமான அதிர்ச்சித் தகவல்கள்!

சென்னை, அக். 17 -

எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு பிறகு நடந்த 5 மாநில தேர்தல்களில் தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளம் ஆகிய 3 மாநிலங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இவற்றில் முக்கியமாக தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான அரசும், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தலைமையிலான அரசும் வீழ்த்தப்பட்டிருப்பது தேசிய அளவில் கவனம் பெற்றது. காரணம், இந்த இரண்டு அரசுகளுமே மாநில உரிமையை சிறிதும் விட்டுக் கொடுக்காமல் போராடியவை. நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நிலைப்பாட்டை மாற்றாமல், நிலை குலையாமல் நின்றவை. கேரளாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும் அது காங்கிரஸ் ஆட்சிக்கு வர வழி வகுத்தது.

இந்த வீழ்ச்சிக்கு காரணம் என்னவென்று அந்தந்த கட்சிகள் ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில் தான், தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தங்கள் கருத்தை கேட்காமலும், 10 முறை ஆட்சேபங்கள் தெரிவித்தும் படிவம் 6ல் மாற்றங்கள் செய்ததாக தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இந்த மாற்றங்களும் நிபந்தனைகளும்தான் பல லட்சம் பேர் பெயர் நீக்கத்துக்கு காரணமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதன்பிறகு, வாக்காளர் பெயர் நீக்கம் தொடர்பாக நடத்தப்பட்ட பல ஆய்வுகள், தேர்தலில் ஆட்சி மாற்றத்துக்கு எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகள் காரணமாகின என்பதை தெளிவுபடுத்தின.

தற்போது, மற்றொரு ஆய்வில், தமிழ்நாட்டில் த.வெ.க. வெற்றி பெற்ற 108 தொகுதிகளில் 100 தொகுதிகளில் வெற்றி வித்தியாசம், எஸ்.ஐ.ஆரில் நீக்கப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையைவிட குறைவாக இருந்தது தெரிய வந்துள்ளது. அதிலும், அதிக வாக்காளர் நீக்கப்பட்ட தொகுதிகளில் த.வெ.க.வின் வெற்றி விகிதம் உயர்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

74 லட்சம் பேர் நீக்கம் ஏற்படுத்திய மாற்றம்

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆருக்கு முந்தைய வாக்காளர் எண்ணிக்கையையும் இறுதி வாக்காளர் பட்டியலையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பது தெரிகிறது. தேர்தல் ஆணைய தரவுகளின்படி, கடந்த 2025 நவம்பர் மாத வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6,41,14,587 வாக்காளர்கள் இருந்தனர். 2026 பிப்ரவரி 23ம் தேதி வெளியிடப்பட்ட எஸ்.ஐ.ஆர். இறுதி வாக்காளர் பட்டியலில் 5,67,07,380 வாக்காளர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இதன்படி, 74,07,207 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதாவது, மாநிலத்தின் மொத்த வாக்காளர்களில் 11.6 சதவீதம் பேர் நீக்கப்பட்டு விட்டனர். இவர்களில் இடம் பெயர்ந்தவர்கள், இரட்டை பதிவுகள், இறந்தவர்கள் என தேர்தல் ஆணையம் வகைப்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில், தகுதியான வாக்காளர்களின் பெயர்கள் தவறுதலாக நீக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. பி.எல்.ஓ.க்கள் பல இடங்களில் நேரடியாக வீடு வீடாக சென்று ஆய்வு நடத்தவில்லை எனவும் கூறப்படுகிறது. இதுமட்டுமின்றி, படிவம் 6 ல் மாற்றம் செய்தது உட்பட



தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக மேற்கொண்ட முடிவுகளாலும், கள அளவில் நடந்த குளறுபடிகளாலும், பழைய எஸ்.ஐ.ஆர். பட்டியலில் பெயர் தேட முடியாத காரணத்தாலும் பல வாக்காளர்கள் தங்கள் பெயரை சேர்க்கவே போராட வேண்டியிருந்ததாக தெரிவிக்கின்றனர்.

நீக்க விகிதம் அதிகரிக்க, அதிகரிக்க த.வெ.க.வின் வெற்றியும் அதிகரிப்பு:

இந்த ஆய்வில் வாக்காளர் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட விகிதத்துக்கும் த.வெ.க.வின் தேர்தல் வெற்றி விகிதத்துக்கும் இடையே காணப்படும் தொடர்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. வாக்காளர் பெயர் நீக்க விகிதத்தின் அடிப்படையில் 234 தொகுதிகளும் இந்த ஆய்வில் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள் ளன. ஒவ்வொரு பிரிவிலும் த.வெ.க. வென்ற தொகுதிகளின் எண்ணிக்கையும் அதன் சராசரி வாக்குப் பங்கும் ஒப்பிடப்பட்டுள்ளன. அதாவது 4.3 சதவீதம் முதல் 9.6 சதவீதம் வரை 59 தொகுதிகளில் 13ல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது. இங்கு த.வெ.க.வின் வெற்றி விகிதம் 22 சதவீதமாகவும், அந்த கட்சி பெற்ற வாக்குகள் 30.8 சதவீதமாகவும் உள்ளது.

அதாவது, குறைந்த வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் த.வெ.க. வெற்றி வாய்ப்பு 22 மட்டுமே என இதனை எடுத்துக் கொள்ளலாம். அதிக வாக்காளர் நீக்கப்பட்ட தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு 78 சதவீதமாக உயர்ந்த விட்டது. அதாவது 59 தொகுதிகளில் 46ல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது. இதேபோல், இந்த கட்சி பெற்ற வாக்குகள் முந்தைய பிரிவில் இருந்த 30.8 சதவீதத்தில் 41.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த வேறுபாடு சாதாரணமாகப் புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். தேர்தல் முடிவுகளுக்கும் வாக்காளர் பட்டியல் மாற்றங்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் ஆராய வேண்டிய அவசியத்தை இது உணர்த்துவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சென்னையைச் சுற்றிய தொகுதிகளில் நடந்தது என்ன?

சென்னை மற்றும் அதனைச் சுற்றி யுள்ள நகர்ப்புறத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் மாற்றங்களுக்கும் த.வெ.க.வின் வெற்றிக்கும் இடையிலான தொடர்பு அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியில் 37 தொகுதிகளில் 32 இடங்களைத் த.வெ.க. கைப்பற்றியுள்ளது. இந்த பகுதிகளில் வாக்காளர்கள் நீக்கப்பட்ட சராசரி விகிதம் சுமார் 20 சதவீதமாக இருந்ததாக ஆய்வு குறிப்பிடுகிறது. சென்னை மாவட்டத்தில் மட்டும் வாக்காளர் பட்டியலின் மொத்த எண்ணிக்கை 29.3 சதவீதம் குறைந்துள்ளது. இதனால்தான், தி.மு.க. வின் கோட்டையாக கருதப்படும் சென்னையிலேயே 2 இடங்களை தான் அக்கட்சி பிடிக்க முடிந்தது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

குறிப்பாக, ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் போன்ற தொகுதிகளில் சுமார் 35 சதவீதம் வரை வாக்காளர்கள் நீக்கப்பட்டதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இதுபோல், சோழிங்கநல்லூர் தொகுதியில் 1,65,459; பல்லாவரத்தில் 1,14,281; வேளச்சேரியில் சுமார் 1,05,829; ஆலந்தூரில் சுமார் 1,03,278; அண்ணா நகரில் 99,020 என வாக்காளர் நீக்க ப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இந்தப் பகுதிகளில் மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தின் அடிப்படையில் அதிக பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. மாவட்ட வாரியான தரவுகளின்படி, சென்னையில் த.வெ.க. வென்ற 14 தொகுதிகளிலும் வெற்றி வித்தியாசம் எஸ்.ஐ.ஆரில் பெயர் நீக்கப்பட்ட எண்ணிக்கையை விட குறைவு. இதுபோல் திருவள்ளூர் மாவட்டத்தில் 9 தொகுதிகளில் 6 தொகுதிகளிலும், மதுரையில் 8 தொகுதிகளில் 7 தொகுதிகளிலும் இந்த நிலை காணப்படுகிறது.

கோவை, திருச்சி, ஈரோடு, செங்கல்பட்டு, நாமக்கல், திருப்பூர், விருதுநகர், வேலூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தவெக வென்ற தொகுதிகள் அனைத்திலும் வெற்றி வித்தியாசம் எஸ்.ஐ.ஆரில் நீக்கப்பட்ட எண்ணிக்கையைவிடக் குறைவு என்பதை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. சேலத்தில் த.வெ.க. வென்ற 4 தொகுதிகளில் 3 தொகுதிகளிலும், சிவகங்கையில் 4 தொகுதிகளில் 3 தொகுதிகளிலும், தூத்துக்குடியில் 3 தொகுதிகளில் 2 தொகுதிகளிலும் இதே ஒப்பீடு பொருந்துகிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கக்கப்பட்டவர்கள் இல்லாதவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் என மூன்று வகையாக பிரிக்கப் பட்டுள்ளனர். இதில் இறந்தவர்கள் பெயர்கள் உண்மையாகவே மரணச்சான்று வாங்கிய பிறகு நீக்கப்பட்டதாக வைத்துக் கொண்டால் கூட, எஞ்சிய நீக்கங்கள் மூலம் மட்டும் 84 தொகுதிகளை த.வெ.க. பெற்றுள்ளது என ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

உண்மையில், பல இடங்களில் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர், உறவினர் அல்லாமல் வேறு ஆட்சேபங்கள் மற்றும் தகவல்கள் அடிப்படையில் கூட இறந்தவர்கள் என வகைப்படுத்தப்பட்டு நீக்கப்பட்டதாக மக்கள் பலர் தெரிவிக்கின்றனர். தங்களிடம் வராமலேயே தங்கள் உறவினர் பெயர் இறந்தவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர். இதுபோன்ற குற்றச்சாட்டுகள், உண்மையான சரிபார்ப்பின் மூலம் தான் அனைவரும் நீக்கப்பட்டார்களா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன. மற்றொரு உதாரணமாக, இறந்தவர் என வகைப்படுத்தப்பட்டு பெயர் நீக்கப்பட்டவர் உயிரோடு இருந்தது பீகாரில் நடந்த எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு பிறகு ஆதாரப்பூர்வமாக நிரூபணம் ஆகியுள்ளது.

கடைசி வரை பெயர் சேர்க்க முடியாமல், கடைசி நேரத்தில் விண்ணப்பம் தந்தும் முடியாமல் தேர்தல் நாளில் ஒவ்வொரு தொகுதியிலும் பல வாக்காளர்கள் வாக்கு இல்லை என்று திரும்பிச் சென்றுள்ளதே இதற்கு சாட்சி என மக்கள் தரப்பில் கூறப்படுகிறது. இதுபோன்ற தவறுகள், குளறுபடிகள்தான் எஸ்.ஐ.ஆர். இல்லாவிட்டால் தேர்தல் முடிவு மாறியிருக்குமோ என்ற சந்தேகத்தை வலுவாக எழுப்பியிருக்கிறது. எனவே, ஒன்றிய அரசு அழுத்தத்தின் பேரில், எஸ்ஐஆர் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அந்த அரசுகளை வீழ்த்த ஒரு ஆயுதமாக பயன்பட்டிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுகள் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் நிலையில், என்ன நடந்தது என்பதை விளக்க வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமை.

வாக்குரிமை பறிக்கப்படுவது அரசமைப்புக்கு எதிரானது என நீதிமன்றமே சுட்டிக்காட்டியிருக்கிறது. இதை கருத்தில் கொண்டு தீர்வு காண வேண்டியதும், இனி வரும் தேர்தல்களை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்த வேண்டியதும் தேர்தல் ஆணையத்தின் கடமை என்பதே பெரும்பான்மையினரின் கருத்தாக உள்ளது.

52 தொகுதிகளை இழந்திருக்க வாய்ப்பு

தேர்தல் ஆணைய புள்ளி விவரங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், வாக்காளர் பெயர் அதிகமாக நீக்கப்பட்ட இடங்கள் த.வெ.க. வெற்றிக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கின்றன. எஸ்.ஐ.ஆரில் நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையை விட குறைவான வாக்கு வித்தியாசத்தில் த.வெ.க. வெற்றி பெற்ற 100 தொகுதிகளில், 52 தொகுதிகள் 15 சதவீதத்துக்கு மேல் எஸ்.ஐ.ஆர். நீக்க விகிதம் கொண்ட மாவட்டங்களில் உள்ளன. இதன்படி அனைத்து தொகுதிகளிலும் பெயர் நீக்க விகிதம் 15 சதவீதத்துக்குக் கீழ் இருந்திருந்தால், த.வெ.க, இந்த 52 தொகுதிகளையும் இழந்திருக்க வாய்ப்பு உள்ளதாக , இந்த புள்ளி விவரங்களை ஆய்வு செய்த நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

எஸ்.ஐ.ஆர் நீக்க விகிதம் மாவட்ட வாரியான விவரங்கள்

கடந்த 2025 நவம்பர் மாத வரைவு வாக்காளர் பட்டியல் மற்றும் நீக்கப்பட்ட வாக்காளர்கள் சதவீதம் மற்றும் தவெக வெற்றி பெற்ற தொகுதிகள் டாப் 10 மட்டும்.

மாவட்டம்	எஸ்.ஐ.ஆர் நீக்க விகிதம்	மொத்தத் தொகுதிகள்	தவெக வென்ற தொகுதிகள்
சென்னை	35.6%	16	14
செங்கல்பட்டு	25.2%	7	5
திருப்பூர்	23.1%	8	4
கோயம்புத்தூர்	20.2%	10	6
காஞ்சிபுரம்	19.6%	4	4
திருவள்ளூர்	17.3%	10	9
திண்டுக்கல்	16.8%	7	1
வேலூர்	16.5%	5	4
ஈரோடு	16.3%	8	5
திருநெல்வேலி	15.2%	5	3

வாக்காளர் அதிகம் நீக்கப்பட்ட தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு உயர்வு

வாக்காளர் நீக்கம்	தவெக வென்ற தொகுதிகள்	வெற்றி விகிதம்	சராசரி வாக்கு விகிதம்
4.3 - 9.6%	59-ல் 13	22%	30.8%
9.7-12.3%	58-ல் 17	29%	32.2%
12.3 - 16.2%	58-ல் 32	55%	34.5%
16.3 - 42.2%	59-ல் 46	78%	41.8%

நன்றி :
‘தினகரன்’
16.10.2026